# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
தை 30
ரா. அவ். 3
ஞாயிறு (12-2-1978
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 71
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60


# இலங்கை மாணவர் நலன்புரி நிலையத்தில் தமிழ் ஏடுகள் இருட்டடிப்பு!

## லண்டன் தூதுவரிடம் ஈழவிடுதலை இயக்கம் ஆட்சேபம்'

இலண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் சார்பில் நிர்வகிக்கப்பட்டுவரும் இலங்கை மாணவர் நலன்புரி நிலையத்தில் (Ceylon Student Welfare Center) இடம் பெற்றுள்ள நூலகத்தில் தமிழ்ப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் எதுவும் இடம்பெருதது குறித்து லண்டனிலுள்ள இலங்கைத் தூதரிடம் லண்டன் ஈழ விடுதலை இயக்கம் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இலண்டனில், அங்குபடிக்கும் இலங்கை மாணவர்களின் வசதிக்காக இலங்கை மாணவர் நலன் புரிநிலையம் ஒன்றை இலங்கைத் தூதரகம் நடத்தி வருகிறது. லண்டனில் 14,000க்குமேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்துவந்தும், இவர்களில் பலர் மாணவர்களாக இருந்தும், இலங்கை மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த நிலையத்து நூலகத்தில் இலங்கையிலிருந்தோ, அல்லது இந்தியாவிலிருந்தோ வெளியிடப்படும் தமிழ்ப்பத்திரிகைகள் இடம் பெருதது அங்குள்ள தமிழ் மாணவர்கள் மத்தியில் பெருத்த குமுறலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நூலகத்தில் சிங்கள மாணவர்களின் நலன் கருதி சிங்களப் பத்திரிகைகள் இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்டு போடப்படுகிறது. இதனுல் சிங்கள மாணவர் தங்கள் மொழியில் தங்கள் நாட்டுப் புதினங்களை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ் மாணவர்களுக்கு இந்த வசதி வாய்ப்புசெய்து தரப்படவில்லை.

இது குறித்து லண்டன் தமிழ் மாணவர்களின் மனக்குமுறலை எடுத்துக்காட்டி மேற்படி நூல்நிலையத்தில் தமிழ்ப்பத்திரிகைகளும் இடம் பெறச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு லண்டன் ஈழ விடுதலை இயக்கச் செயலாளர் திரு. என். எஸ். கிருஷ்ணன், லண்டனிலுள்ள இலங்கைத் தூதருக்கு மனு ஒன்று அனுப்பியுள்ளார்.

மேற்படி இலங்கை மாணவர் நலன்புரி நிலையத்தில் நான்கு சமையற்காரர்கள் வேலைசெய்து வருகின்றனர். இந்த நான்கு பேரில் ஒருவர் கூட தமிழர் இல்லை; நான்கு பேரும் சிங்களவர்களே தமிழர் ஒருவரைக்கூட இந்த வேலைக்கு நியமிக்காததையும் ஈழவிடுதலை இயக்கசெயலாளர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலண்டனில் 'தேசிய முன்னணி' என்ருெர் வெள்ளையர் இயக்கம் இருக்கிறது. இந்த இயக்கத்தின் கொள்கை "இங்கிலாந்து வெள்ளையருக்கு மட்டுமேயுரியது—இங்கிலாந்திலுள்ள ஏனைய ஆசிய ஆபிரிக்க கறுப்பு இனமக்கள் அனைவரும் விரட்டியடிக்கப்பட வேண்டும்" என்பது. இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், தெருவில் காணப்படும் வெள்ளையர் தவிர்ந்த ஏனையோரைத்தாக்கி கொலைசெய்ய உறுதியெடுத்திருப்பவர்கள். இந்த இயக்கத்தை சேர்ந்தவர்கள் அண்மையில் இங்கிலாந்தில் ஓர் யாத்திரையை நடத்த இருந்தார்கள். எனினும், ஜனநாயகத்தின் தொட்டிலாக இங்கிலாந்து இருக்கின்ற காரணத்தினுல் — தொழிற்கட்சி அரசாங்கம், இந்த இனவெறி யாத்திரையை தடை செய்தது.

இந்தச்சம்பவத்தை தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள திரு. கிருஷ்ணன், சிறுபான்மையினத்தவர்களை எப்படிப் பாதுகாக்க வேண்டுமென்பதை பிரிட்டிஷ் அரசிடமிருந்து இலங்கை படிக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

## சுதந்திரனுக்கு மட்டும் விதிவிலக்கா?

இ. போ. சபையைச் சேர்ந்த வாகனங்களில்— எந்த அரசியல் கட்சியை ஆதரிக்கின்ற பத்திரிகையானுலும் சரி— சகல பத்திரிகைகளையும் எடுத்துச் சென்று விநியோகிக்கும்படி அரசாங்கம் இ. போ. ச.வுக்கு கட்டளையிட்டுள்ளதென்றும்—

சகல அரசியல் பத்திரிகைகளுக்கும் அல்லது கட்சிப் பத்திரிகைகளுக்கும் எதுவித பாகுபாடுமின்றி விளம்பரம் கொடுக்கலாமென்று எல்லாக் கூட்டுத்தாபனங்களுக்கும் அரசாங்கம் அனுமதியளித்திருப்பதாகவும்—

அமைச்சர் காமினி திசாநாயகா 31-1-78ல் தேசியஅரசுப்பேரவையில் எடுத்துக்கூறியிருக்கிருர்.

ஆனுல் சுதந்திரன் பத்திரிகை பொதிகளை இ. போ. ச. பஸ்களில் விநியோகம் செய்ய அனுமதி தருமாறு கோரி இ; போ. ச. இயக்குனர் சபைக்கு விண்ணப்பித்து பலமாதங்களாகியும் இன்னும் அனுமதிகிடைத்தபாடில்லை! தெய்வம் விடைகொடுத்தாலும் பூசாரி விடைகொடுக்காத நிலையாஇது என்பது தெரியவில்லை!

அரசாங்கம் பதவிக்குவந்து ஏழு மாதமாகியும் அரசாங்க கூட்டுத்தாபன விளம்பரம் ஒன்று கூட இதுவரை சுதந்திரனுக்கு கிடைத்ததில்லை! சுதந்திரனுக்குமட்டும் இவை விதிவிலக்கா?

# சன்சோனி ஆணைக்குழு முன் மூன்று மகஜர்கள் சமர்ப்பணம்!

## 32 சட்டத்தரணிகள் ஆஜராகின்றனர்

1977 ஆகஸ்ட் இனக்கலவரம் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கென நியமிக்கப்பட்ட சன்சோனி ஆணைக்குழு 8-2-78 புதன்கிழமை காலை 9மணிக்கு யாழ்ப்பான நூல்நிலைய மண்டபத்தில் தனது விசாரணையை ஆரம்பித்தபோது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பாதிக்கப்பட்டதமிழர் மறுவாழ்வுக் கழகம், தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி பாதிக்கப்பட்ட தமிழ் உத்தியோகத்தர் சங்கம் ஆகியவற்றின் சார்பில் எழுத்து மூலமான முறையீடுகள் சட்டத்தரணிகளால் சமர்ப்பிக்கப்பட்டன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் சார்பில் திரு. கே. என். சொக்சி கியூ. சி. சட்டத்தரணிகள் ஜெயா பெரிசுந்தரம், எஸ். உருத்திரமூர்த்தி ஆகியோர் சட்டத்தரணிசோமஸ்கதிர்காமர் அனுசரணையுடன் ஆஜராகினர் திரு. சொக்சி கியூ. சி. அறிக்கையை சமர்ப்பித்தார்.

பாதிக்கப்பட்ட தமிழர் மறுவாழ்வுசபையின் சார்பில் சட்டத்தரணி ரவீந்திரனின் அனுசரணையுடன் திரு. சாம். ஜே. கதிர்காமர் கியூ. சி. சட்டத்தரணிகள் எஸ். நடராஜா எஸ். விஸ்வநாதன் கே. சண்முகலிங்கம், சிவா ராஜரட்ணம், லெஸ்லிபாட்லட், கே. தேவராஜா, மணிவாசகன் அண்டர்வூட், எஸ். சக்ராதரன், எஸ். ஸி. சந்திரகாசன், எஸ். சோமசுந்தரம், ஐ. கேதீஸ்வரன், எஸ்; சிற்றம்பலம், மனோதேவ சகாயம், எஸ். மகேந்திரன். சிவாராஜசிங்கம், திருமதி சாந்தினி ஞானகரன், எஸ். மண்டலேஸ்வரன், ஏ; பி. நைல்ஸ், மகேந்திரன் செல்லத்தம்பு, ராஜன் செல்லத்தம்பு, எஸ். கருணுகரன் ஆகியோர் ஆஜராகினர். திரு. சாம்; ஜே. கதிர்காமர் கியூ. சி. அறிக்கையை சமர்ப்பித்தார்.

தமிழ் தொழிற்சங்கக்கூட்டணியின் சார்பில் திரு. பி. நவரட்ணராஜா, கியூ. சி, சட்டத்தரணிகள் கே. சண்முகலிங்கம் லெஸ்லிபாட்லட். மணிவாசகம் அண்டர்வூட் [illegible] பற்றிமா ஆரோக்கியசாமி, எம். கருணுகரன் ஆகியோர் சட்டத்தரணி எஸ். ரவீந்திரனின் அனுசரணையுடன் ஆஜராகினர். சட்டத்தரணி லெஸ்லி பாட்லட் அறிக்கையை சமர்ப்பித்தார்.

பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர் சார்பில் சட்டத்தரணி மணிவாசகன் அண்டர்வுட் ஆஜராகி மூந்திய வெளியீடுகளை சமர்ப்பித்ததுடன் த.தொ.கூட்டணிக்கு தமது ஒத்துழைப்பை நல்குவர்எனத் தெரிவித்தார்.

### கூட்டணி செயலகத்தில்

**அமரர் ஜீ. ஜீ. நினைவுக்கருத்தரங்கு!**

அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் நினைவுக் கருத்தரங்காக தமிழர் விடுதலைக்கூட்டணியின் வாராந்தக்கருத்தரங்கு 11-2-78 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ் கூட்டணி செயலகத்தில் நடைபெறுகிறது. மு.ஆலாலசுந்தரம் தலைமையில் 'ஜீ.ஜீயின் சமபல பிரதிநிதித்துவ கோரிக்கையும் அதனுல் ஏற்பட்ட தமிழ் இன எழுச்சியும்'' எனும் பொருள்பற்றி நடைபெறும் இவ்வாரவரங்கில் வெ. யோகேஸ்வரன் பா,உ, சி. கதிரவேற்பிள்ளை பா.உ, மு. சிவசிதம்பரம் பா.உ, சட்டத்தரணி இ. விசுவநாதன் ஆகியோர் பேசுவார்கள்.

### தமிழ் தொழிற்சங்க கூட்டணிசாட்சியம்

1977 ஆகஸ்ட் இனக்கொலைபற்றிவிசாரிக்கும் சன்சோனி ஆணைக்குழு முன் பாதிக்கப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபன தமிழ் ஊழியர்கள், மற்றும் தனியார் துறை சார்பில் தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி சாட்சியமளிக்க விருக்கிறது. த.தொ. கூட்டணி தலைவர் திரு. சே.மா. செல்லத்தம்புவும் கூட்டணிசார்பில் சாட்சியமளிக்கவிருக்கிருர். இதற்கான ஏற்பாடுகளை தொழிற்சங்கக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு ஐ.தி. சம்பந்தன் கவனித்து வருகிருர்.

### தமிழ் இல்லை!

புதிய ஜனுதிபதியாக ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், புதியபிரதமராக திரு. பிரேமதாசாவும் பொறுப்பேற்றுள்ளதைக் கொண்டாடு முகமாக இருவரது படங்களும் இ. போ. ச பேருந்துகளில் ஒட்டப்பட்டன. இவர்கள் இருவரும் தமிழர்களின் பிரதமரும், ஜனுதிபதியுமல்லஎன்பதை எடுத்துக்காட்டுவதற்காகவோ என்னவோ, இருவரது படங்களிலும் இருவரது பெயர்களும் ஆங்கிலத்திலும்' சிங்களத்திலும்மட்டுமே இடம் பெற்றிருந்தன- தமிழில் இடம் பெறவேயில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய உலகில் ஒரு கண்ணோட்டம்

தமிழகத்திலிருந்து இரண்டு புதிய சஞ்சிகைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஒன்று, மணியனின் 'இதயம் பேசுகிறது' மற்றது 'சாவி'யின் குங்குமம்.

தமிழ் பண்பாட்டுக்கு அமைவாக வெளி வந்து கொண்டிருந்த தமிழகத்தின் பழம் பெரும் சஞ்சிகையான 'கல்கி' நிறுத்தப்பட்டது தமிழ் இலக்கிய உலகுக்கு ஓர் பேரிழப்பு என்று சென்றவாரம் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அந்த இழப்பை சாவியின் 'குங்குமம்' ஈடு செய்யும் போலத் தோன்றுகிறது.

குத்துவிளக்கின் ஒளிபோல அமைதியாகவும், அடக்கமாகவும் 'குங்குமம்' காட்சியளிக்கிறது.

அதே சமயம் மணியனின் 'இதயம்' மின்சார ஒளிபோல பகட்டாகவும் கவர்ச்சிகரமாகவும் ஜொலிக்கிறது. கொஞ்சம் 'செக்ஸ்' அதிகம் போல காணப்பட்டாலும், மணியனின் 'இதயம்' எடுத்த எடுப்பிலேயே இலங்கை வாசகர்களை கவர்ந்து விட்டது என்னவோ உண்மைதான்!

'இதயம்' இதழில் தமது இலங்கைச் சுற்றுப் பயணக்கட்டுரையை மணியன் எழுதத் தொடங்கியிருக்கிறார். பயணக் கட்டுரை எழுதுவதில் மணியனுக்கு நிகர் மணியனே தான்! ஆனாலும், அக்கட்டுரையில் அவர் விட்டுள்ள சிறிய தவறொன்றையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

தந்தைசெல்வா, தமிழ் நாட்டுக்கு சென்ற ஆண்டு வந்திருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். சென்ற ஆண்டு தான் தந்தை செல்வா அமரரானார். தந்தை செல்வா அவர்கள் தமிழ் நாட்டுக்கு சென்றிருந்தது 1972ம் ஆண்டு. அப்போது தான் அவர் தமிழ் நாட்டுப் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

'இதயம்' என் சொந்தப்பத்திரிகை; அதிலே தாராளமாக இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் பற்றி எழுதுவேன் என்று இங்குவந்த போது உறுதிதந்து விட்டுச் சென்றவர் மணியன். அவர் தமது கட்டுரைத் தொடரில் தமிழர்பிரச்சினைகள் பற்றி விரிவாக எழுதுவார் என்று எதிர்பார்ப்போம்.

* * *

யாழ் இலக்கிய வட்டம் என்ன செய்கிறது அயர்ந்து தூங்குகிறதா? உயிரோடு இருக்கிறதா என்ற கேள்வியை பலர் என்னிடம் எழுப்பினார்கள். யாழ் இலக்கிய வட்டத்தின் சார்பில் ஒவ்வொரு கிழமையும் இலக்கியக்கலந்துரையாடல் ஒன்றைத் தான் ஏற்பாடு செய்யப் போவதாக விமர்சன எழுத்தாளர் ஒருவர் அண்மையில் நடைபெற்ற புத்தகவிழா வொன்றில் கலந்து கொண்டபோது என்னிடம் கூறினார். அப்போது அருகே நின்ற மற்றோர் எழுத்தாளர் ஒவ்வொரு கிழமையும் வேண்டாம் — ஒரு மாதத்துக்கு ஒரு முறை கூடினாலே பெரிய காரியம் என்றார். இந்தப் பேச்சு வெறும் காற்றோடு போகாமல் செயலுருப்பெறும் என்று எதிர்பார்க்கலாமா?

* * *

தமிழ் ஈழத்தின் கவிஞர்களில் ஒருவரான அமரகவி நீலாவணனின் நினைவு விழா அண்மையில் பாண்டிருப்பு மாரியம்மன் ஆலய வீதியில் நடைபெற்றது. விழாவுக்கு ஓய்வு பெற்ற அதிபர் திரு. க. அருளையா தலைமை தாங்கினார். விழாவில் கவிஞர் பாண்டியூரன். மருதூர் கொத்தன், வித்துவான் ஞானரத்தினம், அ. வேல்முருகு ஆகியோர் நீலாவணனின் சிறப்புக்களை எடுத்துக் கூறினர், பாண்டிருப்பு நீலாவணன் இலக்கிய வட்டத்தின் சார்பில் இவ்விழாவை எடுத்து அமரகவிக்கு அஞ்சலி செலுத்த முன்னின்றுழைத்த கவிஞர் மருதூர்வாணன், பாண்டியூரன், நீலாவணைதேவராசா ஆகியோரை அனைவரும் பாராட்டினர்.

* * *

தமிழ் ஈழத்தின் தரமான கலை இலக்கிய சஞ்சிகையான 'சுடர்' இதழை மேலும் முன்னேற்றவும், வளர்க்கவும் செய்யப்பட வேண்டிய பணிகள் பற்றி ஆலோசிக்க ஓர் கலந்துரையாடலை சுடர் கலை இலக்கிய மன்றத்தின் கொழும்புக் கிளையினர் எதிர்வரும் 11-2-78ல் கொழும்பு அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பணிமனையில் நடத்துகின்றனர். காசி ஆனந்தன் ஈழவேந்தன்; எஸ். சி. சந்திரகாசன் ஆகியோர் கலந்து கொள்ளும் இக்கூட்டத்துக்கு சமுகம் தருமாறு சுடர் அபிமானிகளை சுடர்கலை இலக்கிய மன்றம் அழைத்துள்ளது.

— கோ[illegible]




க. வரதராஜன்,
2ம் குறிச்சி,
பெரியகல்லாறு.

கே: எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் பற்றி சில இளைஞர்கள் தவறான அபிப்பிராயம் கொண்டுள்ளார்களே, அதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: அதுதான் நீங்களே கூறிவிட்டீர்களே தவறான அபிப்பிராயம் என்று. தங்கள் அபிப்பிராயம் தவறு என்று உணரும்போது அதற்காக அவர்கள் வருந்துவார்கள்— பின்னர் திருந்துவார்கள்!

ஃ

செல்வி வீ. மேகலா,
இருதயபுரம்
மட்டக்களப்பு.

கே: இலங்கைத் தமிழர்களில் சிலர், தமது வரலாறு தெரியாத காரணத்தினால் தான் தமிழ்ஈழக் கோரிக்கையை ஆதரிக்கமறுக்கிறார்கள். இவர்களுக்கு இலங்கைத் தமிழரின் சரித்திரத்தை எப்படி உணர்த்தலாம்?

ப: தமிழர்களுக்கு மத்தியில் தம்மைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையை வளர்க்கும் நோக்குடன்தான், தமிழர்கள் வந்தேறுகுடிகள், சிங்களப்படைகளில் கூலி வேலை செய்யவந்தவர்கள் என்றெல்லாம் தமிழ் சிறுவர்களுக்கு பாடபோதனை செய்கிறது சிங்கள அரசு. இவற்றை முறியடிப்பதற்கு குறைந்த விலையில், நமது வரலாற்றை தெளிவாக விளக்கும் பிரசுரங்கள் வெளிவரவேண்டும். தமிழர் விடுதலைக்கூட்டணி கூட்டங்களில், கருத்தரங்குகளில், மாநாடுகளில் எல்லாம் ஒரு பேச்சாளராவது நமது தமிழ்ஈழநாட்டு வரலாற்றை எடுத்துரைத்து தமிழ்மக்களின் உள்ளங்களில் தெளிவையூட்டவேண்டும். வரலாற்றைஎழுதிவைக்காததும், மறந்ததும்தான் தமிழினத்தின் வீழ்ச்சிக்கு காரணம்!

ஃ

செ. சுப்பிரமணியம்,
கந்தளாய்.

கே: சுதந்திரத்துக்காக பாடுபடும் தாங்கள் தமிழர்க்கு கூறும் புத்திமதி யாது?

ப: ஒவ்வொரு தமிழனும் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளவும், தனது காலில்தானே நிற்கவும், தனது தேவைகளைதானே பூர்த்திசெய்துகொள்ளவும் பயிற்சியும், பழக்கமும் பெற வேண்டும்!

ஃ

செல்வி க. கமலநாயகி,
5ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

கே: ஐ.தே.கட்சியின் புதிய வரவுசெலவுத் திட்டம் ஜனநாயகம், சோசலிசம் எனக் கூறுகிறது. அவர்களின் ஜனநாயகம், சோசலிசம் பற்றி கொஞ்சம் கூறுங்களேன்!

ப: அவர்களது அகராதியில் ஜனநாயகம் என்பது சர்வாதிகாரம்— சோசலிசம் [illegible]

யோசேப் அல்பிறட்,
திருமலை வீதி,
வவுனியா,

கே: சந்தர்ப்பத்துக்கு தகுந்தமாதிரி கட்சிவிட்டு கட்சி மாறும் சில அன்பர்களை பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்.

ப: பொதுவாழ்விலிடம் பெற்றுள்ளகுஷ்டரோகிகள் என்று கருதுகிறேன்!

ஃ

செல்வி வி. சாந்தபவானி
இருதயபுரம்,
மட்டக்களப்பு.

கே: வெளிநாட்டில் இருக்கும் தமிழ் சகோதரர்களுக்குள்ள தன்மானமும் தனிநாட்டு ஆர்வமும் ஏன் இலங்கையிலுள்ள தமிழ் சகோதரர்களுக்கு இல்லை?

ப: வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் சிறைக்கு வெளியே சுதந்திரமாக இருந்துகொண்டு சிறையை உடைக்க முயற்சிக்கிறார்கள்; இலங்கைக்குள் உள்ள தமிழர்கள் சிறைக்குள் பூட்டப்பட்டு சங்கிலியால் பிணைக்கப்பட்டு, சவுக்கடிகளுக்குமத்தியில் உள்ளிருந்தபடியே சிறையை உடைக்கமுயற்சிக்கிறார்கள்; இதுதான் வித்தியாசமே தவிர, ஆர்வம் இல்லையென்று கூறிவிடமுடியாது!

ஃ

அருள்பிரகாசம்,
பாண்டிருப்பு—1
கல்முனை.

கே: தனிநாடு தருகிறேன் —தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று ஆட்சிக்கு வருவோர் வாயளவில் கூறிக்கொண்டேபோனால் அதன் முடிவுஎன்ன?

ப: தமிழ்மக்கள் செயலளவில் சுதந்திரத் தமிழ் ஈழத்தை அமைத்து முடிப்பார்கள்!

ஃ

வீ. சுகுமாரன்,
சாவகச்சேரி.

கே: சிறைமீண்ட பொன். சத்தியசீலன் இப்போது எங்கே?

ப: சென்னையில் சில காலம் தங்கியிருந்து இயக்கப் பணிபுரிந்த திரு. சத்தியசீலன் இப்போது மேற்கு ஜெர்மனிக்கு சென்றிருக்கிறார். எங்கு சென்றாலும் இயக்கத்தை மறவாத இலட்சியக்காளை அவர்!

கே: தந்தை செல்வாவின் படத்தினை எனது கடையில் வைத்திருக்கிறேன். தினம் தினம் படத்தினைப் பார்க்கும்போது, என்னுடலில் மின்சாரம் பாய்வதுபோல புதியசக்தியும், வேகமும் உண்டாகிறது இது ஏன்?

ப: அதுதான் தந்தை செல்வா எனும் மந்திரசக்தியின் மகிமைதந்தைசெல்வாஎன்ற அந்த மந்திரத்தை தினம் தினம் உச்சரியுங்கள்; தெளிவும்துணிவும்உறுதியும், நெஞ்சில் பிறக்கும், அந்த மந்திரம் ஒன்றே தமிழினத்தை இணைக்கும் ஒற்றுமைப்பாலமாக விளங்கி தமிழ்ஈழத்தை பெற்றுத்தரும்!

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,

பாவியுங்கள்




றோயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

றோயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றோயல் பேக்கிங்பவுடர்
றோயல் கஸ்டட் பவுடர்
றோயல் கோண் பிளவர்
றோயல் பிஸ் மக்ஸ்
றோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இண்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுகெலும்பற்ற தமிழக எழுத்தாளர்கள்?

## உலகத் தமிழர் பண்பாட்டியக்க மாநாடு - ஒரு கண்ணோட்டம்

**க. இராஜமனோகரன்**

சென்ற கட்டுரையிலே சிதம்பரத்தை நோக்கிப் புறப்பட்ட உங்களை மீண்டும் ஒருமுறை சென்னையிலேயே நிற்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

21ம் திகதியன்று மாலை அனைத்திந்தியத் தமிழ்எழுத்தாளர் சங்கத்தினர் திருவல்லிக் கேணியிலமைந்துள்ள தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்க மாடியிலே எமக்குத் தேநீர் விருந்தொன்றை அளித்தனர். அகிலன். நா. பார்த்தசாரதி, இராஜவேலு போன்றவர்களோடு தமிழீழத்தைச் சேர்ந்தவரும் ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் நாட்டிலே எழுத்துப் பணி இயற்றிவருபவருமான சிவபாதசுந்தரம் அவர்கள் உட்பட ஏராளமான எழுத்தாளர்கள் சமுகந்தந்திருந்தனர். விருந்தின் போது தமிழீழத்தின் சார்பிலே உரையாற்றிய நண்பர் இளங்கோ, தமிழக ஏடுகள் தமிழீழச் செய்திகளைப் புறக்கணிக்கின்றமை பற்றி நியாயபூர்வமாக எடுத்தியம்பியதோடு, அகிலன் அவர்களிடம், 'பால் மரக்காட்டினிலே...' என்று எழுதி மலேசியத் தமிழர்படுகின்ற இன்னல்களை வெளியுலகுக்கு எடுத்துக்காட்டியவண்ணம் 'பனை மரத் தோப்பினிலே...' என்று எழுதித் தமிழீழத்தவரின் இன்னல்களையும் வெளிநாட்டவருக்கு விளங்கவைக்கும்படி கேட்டார்.

"மலேசியத் தமிழருடையது பொருளாதாரப் பிரச்சனை. ஆனால் உங்களுடையதோ அரசியற் பிரச்சனை அங்கு கைவைத்தால் அஃது எம்மைப் பாதிக்கும்! என்ற விடையே கிடைக்கப்பெற்றோம்.

எம்முடைய பிரச்சனை வெறும் மொழிப்பிரச்சனையல்ல — இனப்பிரச்சனையுமல்ல. அது விடுதலைப் பிரச்சனை—இறைமைப் பிரச்சனை உயிர்ப்பிரச்சனை என்று மீண்டும் மீண்டும் எடுத்தோதியும்; சாதாரண மக்களுக்கு ஒருமுறையிலேயே விளங்கிய "அப்பிரச்சனை" எழுத்தாளர்களுக்குப் புரியவில்லையென்றால், அது மூளையில்லையென்பதாலல்ல- முதுகெலும்பில்லாமையாலேயே.

தமிழீழத்தைத் தமது வியாபார நிலையங்களில் ஒன்றாக உபயோகிக்க மட்டுமே ஆசை கொண்டுள்ளனரேயன்றி இனப்பற்றோ அல்லது சாதாரண மனிதாபிமானமோ அற்றவர்கள். இயற்கைப் புயலால் இழிவுறும் நிலையை எழுதும் கை இனப் புயலால் அழிவதை எழுத மறுக்குமென்றால் அந்தக் கைக்குரியவரை வேறெவ்வாறு விபரிக்க வியலும்.

### பூம்புகார்

இனி, சிதம்பரம் நோக்கிப் புறப்படுவோம். திருவெம்பாவைக் காலத்திலே சிதம்பரத்தை அடைந்தயாம் அன்று இரவும், மறுநாளான சனியன்று விடியற்காலையிலுமாக நடராஜனின் நடனத்தைக் கண்டு இன்புற்றோம். காலை 8.30 மணியளவிலே காவிரிப்பூம் பட்டனத்தை நோக்கிப் புறப்பட்டோம். 'சீதவளவயற் புகலி...' என்று சேக்கிழார் ஏன் பாடினார் என்பதைச் சீர்காழியினூடு செல்லும்போது உணரமுடிந்தது. முறையே கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோரின் தோரண வாயில்களினூடே பூம்புகாரை அடைந்தோம். சிலப்பதிகாரக் கலைக்கூடம், இலஞ்சி மண்டபம், பாவையரங்கு போன்ற ஒவ்வொன்றும் கலைஞரின் கலைநுட்பத்தையும் எண்ணவேற்றத்தையும் பறைசாற்றுவதாயுள்ளது. பாவையரங்கிலேயுள்ள எட்டுத்தூண்களிலும் 'யான் நோக்குங் காலை...,' 'அனிச்சமும் அன்னத்தின்...' போன்ற எட்டுக் குறள்களை ஒவ்வொன்றாகப் பொறித்து அவற்றின்மேலே சாதாரண பெண்களினளவிலேயே யமைந்த சிற்பங்களை அமைத்துள்ளனர்.

பரிமேலழகருட்படப் பதின்மரின் உரையையும் மிஞ்சுகின்றவகையிலே குறளின் பொருளைச் அதற்குரிய சிற்பமுணர்த்துகின்றதென்றால் அவ்வரங்கின் மாண்பு எத்தகையதென்பதை உய்த்துணருங்கள். இலஞ்சி மண்டபமானது மேன்மாடிகளுடனும் நீச்சற்றடாகமிரண்டுடனும இனிய தோற்றத்துடன் — விளங்குகின்றது. சிலப்பதிகாரக் கலைக்கூடமோ 'இதை விட வேறு விதமாக இதனை அமைக்க முடியாது' என்று எண்ணவைக்கும் விதத்தில் அமைக்கப்பெற்றுள்ளது. இளங்கோவடிகள், கரிகாற் சோழன், கோவலன், கண்ணகி,மாதவி ஆகியோரின் பிரமாண்டமான சிலைகளுட்பட அனைத்துமே மிகவும் நன்றாக அமைந்துள்ளன. சுருங்கக் கூறின், சைவனொவ்வொருவனும் சிதம்பரத்துக்குச் செல்லவேண்டுமென்றால் தமிழனொவ்வொருவனும் பூம்புகாருக்குச் செல்லவேண்டும். நவீன வசதிகள் கொண்ட உல்லாசப்பயணிகள் விடுதியோடினைந்துள்ளமை இன்னும் உதவிபுரிவதாயுள்ளது.

சனியன்றே திருச்சி நோக்கிப் புறப்பட்ட யாம் மறுநாளான ஞாயிறன்று எமது சொந்த வேலைகளிலே மூழ்கிவிட்டுத் திருவாதிரை நாளான திங்களன்று காலையிலே திருவானைக்கா, திருச்சிராய்ப்பள்ளி (குன்று[illegible]) ஸ்ரீரங்கம்போன்ற திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு இயற்றினோம். அன்று இரவு 8.30 மணியளவிலே விமானமூலமாகத் தமிழக மண்ணை நீத்துத் தமிழீழ மண்ணை அடைந்தோம்.

### எழுச்சிக் கூட்டம்

இலங்கை வித்தியாலய தமிழ் அதிபர் சங்கத்தின் சார்பில் 18-2-78ல் யாழ் பாரதி பாடசாலையில் எழுச்சிக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் வடமாநில கல்வி அதிகாரியும். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும். உடுப்பிட்டி பா. உ. இராசலிங்கமும்உரையாற்றுவார்கள்,

### தமிழீழத்தவர் அறியவேண்டியவை

இதுவரையிலும், பயணத்தைப் பற்றியும் அங்கு நடந்தவை பற்றியும் வெறுமனே அறிக்கை போன்று எழுதி வந்தேன். இனி, இப்பயணத்தின் மூலம் யான் அறிந்து கொண்டவற்றிலே நீங்களும் அறியவேண்டியவற்றை — காய்தல் உவத்தலின்றி ஆய்ந்து கண்டவற்றை — உங்களுக்குத் தருகின்றேன்.

### தமிழின் நிலை

சாதாரண மக்களைப் பொறுத்தரையிலே, 'தமிழையா பேசுகின்றீர்கள்!' என்று யாம் அவர்களிடம் அங்கலாய்க்கின்றோம்; அவர்களும் எம்பேச்சினைப் புரியாமல் விழிக்கின்றார்கள்; இதனை நன்கு உணரவைப்பதற்காக அங்கு ஏற்பட்ட ஒரு அனுபவம் இதோ: 'திருச்சியிலே நண்பர் இளங்கோவும் யானும் 'நந்தா என் நிலா' பார்ப்பதற்காகப் படமாளிகைக்குச் சென்றிருந்தோம். அங்கு நின்றிருந்த எம் வயதொத்த இளைஞரொருவரிடம் 'படம் எத்தனை மணிக்குத் தொடங்கும்?' என இருமுறை வினவியபோதும் அவரால் அதனைப் புரிந்துகொள்ள வியலவில்லையென்பதைப் புரிந்த யான் 'ஷோ என்ன ரைமிற்கு ஆரம்பிச்சிடுவாங்க?' என்றேன். உடனடியாக 2.30 மணிக்கு என்று பதிலளித்தார், 'நீர் தமிழர் தானே' என அவரிடம் யான் கேட்டபோது 'ஆமா' என்றார்.

அதன் பின்னர் ஏறத்தாழ ஐந்து நிமிடங்களாக யாம் கதைத்தவற்றை அவதானித்த மேற்படி இளைஞர் எம்மிடம் 'நீங்கள் கேரளாவா?' என்றார். 'இல்லை. யாம் யாழ்ப்பாணத்தவர்கள்... 'சிலோன்' என்றோம். 'ஆங்கிலம்சரளமாகவருமா?' என்றார். 'ஓம்' என்றோம். 'அப்போ, தமிழ் மட்டுந் தானே வராது?' என்றார். எமக்குத் தூக்கிவாரிப்போட்டது. தனித் தமிழிலே அமைந்திருந்த எமது பேச்சினைக்கேட்ட தமிழரொருவர் எம்மை நோக்கி மேற் [illegible] வினவி[illegible]றென்றால் பிழை எங்கு என்பதை நீங்களே புரிந்துகொள்வீர்கள்!

தொடர்ந்து மேற்கண்ட இளைஞரிடம் மிகவும் ஆறுதலாக நான்கைந்து தமிழ் வசனங்களைப் பேசினேன். 'நீங்க என்னென்னமோ பேசிறீங்க, ஒண்ணுமே புரியில்லீங்க' என்றார். ஆனால், புலவர் பெருஞ்சித்திரனார் போன்ற அறிஞர்கள் 'உங்கள் பேச்சைக் கேட்க எவ்வளவு மகிழ்ச்சியாகவுள்ளது! நல்ல தமிழை நல்ல முறையிலே பேசுகின்றீர்களே!" என்று வியந்தனர். புலவர் அவர்கள் எமக்கன்பளித்த 'மகபுகு வஞ்சி' என்ற நூலிலே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணத்தையும் நன்கு விளங்கவைக்கும் குறளடிவஞ்சிப்பாவான் இயன்ற கவிதையொன்று. இதோ,

நல வஞ்சிலா நாடொளிக்
கண்ணி!
அலவஞ்சுக; அறிவினர்
முனப்
பலமடம் பயில்; பழி
நாண் மிக;
உலகிழிஞரை உளம்
பயிர்ப்பு!
கொளினே,
நினக்கும் தனக்கும்
நினரிக்கு மல்லதை
இனரிக்கும் பிறரிக்கும்
இனயளாகுவையே!

இத்தகைய தமிழறிஞர் எம்மை அவ்வாறு புகழ்ந்தாரென்றால் அப்பெருமை எம் தமிழீழ மண்ணுக்கேயுரியதன்றோ!

### தமிழர் நிலை

ஏழ்மை, ஒற்றுமையின்மை என்பவையே மிகுந்துள்ளன. அரசியலைப் பொறுத்த வரையிலே கொள்கைக்கு மதிப்பளிப்பதென்பதில்லை — தலைவருக்கே மதிப்புண்டு. அண்மைக் காலம் வரை இங்கிருந்து இப்போ அங்குசென்று வாழும் திரு.ரஹ்மான் அவர்கள் இந்நிலையை "ஈழத்திலே மக்களுக்கு ஏற்ப அரசியற்றலைவர்கள் வளைகின்றார்கள், இங்கோ, தலைவர்களுக்காக மக்கள் வளைகின்றார்கள். என்று கூறி விளங்கவைத்தார். இந்நிலைமை எவ்வளவு தூரம் பாதகமானது என்பதை அங்கு சென்று பார்த்தால் மட்டுமே விளங்கும்.

இந்த வேளையிலே 'சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்' மூலம் அங்கு சென்றவரின் நிலையையும் இயம்பவேண்டியது என் கடமையல்லவா! இலங்கைத் தீவில் வாழும் அனைவருக்குமாக மலையகத்திலே மாடாக உழைத்து உணவின்றி ஓடாகத் தேய்ந்து எத்தனையோ இனப்படுகொலைகளுக்கு ஆளாகி கொழும்பு வந்து நுழைவாணை பெறும்வரை காடையரின் தொல்லைகளிலிருந்து தம் உடல், பொருள், ஆவி, கற்பு என்பன யாவற்றையும் பாதுகாத்து எவ்வித வசதியுமே இல்லாத வண்டி மூலம் மன்னார் வரைசென்றும் அங்கும் கள்வரின் இன்னல்களுக்கு ஆளாகி ஈற்றிலே கப்பல் மூலம் தமிழகத்தை அடைந்தவர்கள் அங்கு என்ன கூறுகிறார்கள் தெரியுமா? 'இங்கு ஏன் வந்தோம்?" என்று. எண்ணிப் பார் தமிழா உன் நிலையை.

### எம் தமிழ் மகளிர்

சென்னையிலே சில இடங்களுக்குச் செல்வதற்காக யாம் தமிழக நண்பர் சிலரை விசாரித்தபோது அவர்கள் எம்மை நோக்கி முதலிற் கூறியது — "உங்கள் மீது கொண்ட பற்றின் காரணமாக ஒன்றைக்கூறுகின்றோம் சென்னையிலுள்ள சில பகுதிகளில் நீங்கள் சிலோன்காரர் என்றுதெரியப்படுத்தவேண்டாம். தெரிந்தால் முகத்திலே காறி உமிழாக் குறையாகஉங்களைப்பார்ப்பார்கள் என்றார்கள். எதுவுமே புரியாதயாம் ஏனென வினவினோம்."உங்கள் மகளிர் இங்கு வந்து செய்கின்றவை காரணமாக' என்று சில உண்மைகளை விளக்கினர். அவர்கள் கூறியதன்படி, கல்வி பயில்வதற்காகவும் வியாபார நிலையங்களின் கடத்தலுக்காகவுமாக இந்தியாவிற்குச் செல்லும் எம் தமிழ்ப்பெண்களில் முக்காற் பங்கினர்க்குமதிகமானோர் பணத்திற்காகவும் இங்கு தெரியாதவகையிலே இன்பத்தை அனுபவிக்கலாமென்ற'துணி'வாலும் அங்கு அங்கு கற்பினை விலை பேசுகின்றனர்! சென்னைநகரில் லுள்ள 'கீதம்' பாடும் விடுதியொன்றில் உபயோகப்படுத்தப்படும் அத்தனை 'இன்பவல்லிகளும்' எம் தமிழ் மகளிர் என்பதை அவர்கள் கூறியபோது யாம் அவமானத்தாலே குன்றிப்போனோம்.

உலகத்தமிழ்ப் பண்பாட்டைப் பற்றி எண்ணிப்பார் தமிழா!

சிறை காக்கும் காப்பு
எவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் கற்பே தலை

—5-ம் பக்கம் பார்க்க

"மில்க்வைற் செய்தி-இதழ் 26"
10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் சோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 மெடிக்கேட்டட் சோப், அல்லது 2 சலவைப்பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியை பெற்றுக் கொள்ளுங்கள்,
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதற் கோணல் முற்றும் கோணலா?

முதற் கோணல் முற்றும் கோணல் என்பார்கள்

'சிறீலங்கா'வின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நாட்டு மக்களுக்கு புதிய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கண்டியிலுள்ள எண்கோண மண்டபத்திலிருந்து விடுக்க இருந்த சிறப்பு செய்தியில் இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் உரிமைப் பிரச்சினை சம்பந்தமாக ஏதாவது உருப்படியான—தமிழ் பேசும் மக்கள் உளம் பூரிக்கத்தக்க அம்சம் இடம் பெறக் கூடும் என்று பலரும் ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்தார்கள்.

ஆனல் ஜனாதிபதியின் அந்த முதலாவது உரையே தமிழ் பேசும் மக்களுககு மிகப்பெரிய ஏமாற்றத்தை அளித்திருக்கிறது என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். இதன் காரணமாக முதற் கோணல் முற்றுங் கோணலாகி விடுமோ என்ற ஆசங்கையும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் பேசும் மக்களின் உரிமைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திட தமிழ் இனத்தின் சுயாட்சி அபிலாஷைகளை ஈடுசெய்திட தமிழ் சமுதாயத்தின் மனக்குறைகளை நிறைவேற்றிட ஜனாதிபதி ஜே. ஆர். ஓரிரு சமிக்ஞைகளையாவது தமது செய்தியில் வெளியிடுவார் என்று நம்பி ஆவலோடு காத்திருந்தவர்கள் அனைவரும் இறுதியில் ஏமாற்றம் அடைந்தார்கள்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் உறுதியுரையேதும் புதிய ஜனாதிபதியால் தரபபடாதது மட்டுமல்ல—தமிழ் தேசிய இனம் கடந்த 1977 பொதுத் தேர்தலில் ஜனநாயக முறையில் அளித்த திட்டவட்டமான தெளிவான தீர்ப்பை — சுதந்திர சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை — ஒரேயடியாக மறுக்கும் அகம்பாவத்தின் சாயலையே ஜனாதிபதியின் உரையில் காணக்கூடியதாக இருக்கிறது.

"எந்த இனத்தவர்களும் நாட்டைப்பிரிக்க இடமளிக்க மாட்டேன், ஜனாதிபதியின் கீழ்வரும் இந்த நாடு ஒரே நாடு. இந்த நாட்டின் சகல மொழி பேசும் சகல இனங்களையும் சேர்ந்த 140 இலட்சம் மக்களுக்கும் நானே தலைவன்"

என்று தனது முதல் செய்தியிலேயே முழக்கமிட்டிருக்கிறார் சிறீலங்காவின் புதிய ஜனாதிபதி.

"நாட்டைப்பிரிக்க இடமளிக்கமாட்டேன்" என்று அவர் ஆணவத்துடன் பேசியிருப்பதை விட, பிரிவினைக் கோரிக்கை எழுவதற்கான காரணங்களை அகற்றி, அதன் மூலம் நாட்டை ஒற்றுமைப்படுத்துவேன் என்று அடக்கத்துடன் கூறியிருந்தாரென்றால்-அவருடைய தூய்மை நிறைந்த பெருந்தன்மையை—தமிழ் சமுதாயம் நெஞ்சார மெச்சியிருக்கும்! வரவேற்றிருக்கும்! போற்றியிருக்கும்!

ஆனல் நாட்டைப் பிரிக்க இடமளிக்க மாட்டேன்—இந்த நாடு ஒன்றுதான்—என்று ஜனநாயகத்தின் பாதுகாவலராக தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டிருக்கும் புதிய ஜனாதிபதி எடுத்த எடுப்பிலேயே அறிவித்திருப்பது, 1977 பொதுத் தேர்தலில் தமிழ் ஈழத் தேசிய இனம் அளித்திருக்கும் திட்டவட்டமான தெளிவான ஜனநாயகத் தீர்ப்பின் கழுத்தை நெரிப்பது போலவே காணப்படுகிறது.

தமிழ்பேசும் மக்கள் எந்தஒரு நாட்டையும் பிரிக்கமுயற்சிக்கவில்லை; இருந்த, இழந்த, தங்கள் அரசை சுயநிர்ணய அடிப்படையில் தங்கள் சொந்தத் தாயகத்தில் மீள அமைத்துக் கொள்ளவே போராடுகிறார்கள் என்பதையும் ஜனாதிபதி அவர்களுக்கு மிகவும் பொறுப்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

சகல இன மக்களுக்கும் 'நானே தலைவன்' என்றும் புதிய ஜனாதிபதி முழக்கமிட்டிருக்கிறார்!

நம்மீது திணிக்கப்பட்டுள்ள இன்றைய அரசியல் சட்டப்படி நாட்டின் தலைவர் அவரே—அதை யாரும் மறுக்க முடியாது!

அதேசமயம் சட்டப்படிதான் அவர் தலைவரேதவிர—மக்களின் —குறிப்பாகத் தமிழ் மக்களின்—சம்மதப்படியல்ல என்பதையும் நாம் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்!

ஜனாதிபதிக்கான தேர்தல் ஒன்று நாடு முழுவதும் நடைபெற்று—அதிலே தமிழ் மக்களும் பங்கேற்று—அத்

## எண்ணம்

தேர்தலில் ஜனாதிபதியாக ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவுசெய்யப்பட்டிருந்தாரென்றால், 'எல்லா இனங்களுக்கும்' நானே தலைவன் என்ற அவரது கூற்றுக்கு யாரும் மறுபேச்சுப்பேசமுடியாது!

ஆனல் ஜனாதிபதிக்கான தேர்தல் எதுவும் நடைபெறவில்லை!

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அவருடைய ஐ. தே. கட்சியினரும் 1977 பொதுத்தேர்தலில் சிங்கள பிரதேசங்களிலுள்ள மக்களின் நம்பிக்கையை நூற்றுக்கு ஐம்பத்தொரு வீதம் பெற்றுக்கொண்டனரேதவிர—நூற்றுக்குநூறு தமிழ்மக்கள்வாழும்தமிழ் பிரதேசத்தில் தமிழ் இன மக்களின் நம்பிக்கையை பெறத்தவறிவிட்டனர். தமிழ் இனத்தின் நம்பிக்கையை ஜனநாயக அடிப்படையில் பெறத்தவறியவர்கள் தமிழ் இனத்தின் தலைவர்கள் தாங்களே என்று எந்தவிதத்திலும் உரிமை கொண்டாட முயற்சிப்பது ஒருபோதும் தார்மீகமாக இருக்கமுடியாது.

தமிழ்தேசிய இனத்தின் ஒரே தலைமை தமிழர் விடுதலைக் கூட்டணி—அதன் இன்றைய ஒரே தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களே. வேறுயாரையும் தலைவர்களாக ஏற்பதற்கு தமிழ் சமுதாயம் சம்மதம் அளித்தது இல்லை!

புதிய ஜனாதிபதி அவர்கள், தமிழ் மக்களின் உள்ளக்குமுறலை உணர்ந்து புரிந்து, தமிழினத்தின் நியாயபூர்வமான சுதந்திர அபிலாஷைகளை ஈடுசெய்வதன் மூலம் சமத்துவ அடிப்படையில் தமிழ், சிங்கள தேசிய இனங்களிடையே ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் பேணிவளர்க்க உள்ளபடியே முயற்சி எடுப்பாராயின் அந்த முயற்சிகளுக்கு நாம் எப்போதும் உறுதுணையாக இருப்போம் என்று இச்சமயத்தில் உறுதியளிக்க விரும்புகிறோம்.

ஈழத்தின்
ஈடிணையற்ற
இலக்கிய
ஏடாம்
சுடர்
CHUDAR
மார்கழி--தை
இதழ்
உணர்ச்சிக் கவிஞர்
காசி ஆனந்தனின்
"சிறைச்சாலை
இனிக்கும்"
தொடர் கட்டுரை
கவிதைகளுடன்
இந்த வாரம்
எங்கும்
கிடைக்கும்

# "சுதந்திர ஒளியைக்காண மெழுகுவர்த்திகளாக மாறுவோம்!"

## கரிகாலன் நூல் வெளியீட்டு விழாவில் சட்டத்தரணி சந்திரகாசன் பேச்சு!

"மின்சார பல்புகளில் நாற்பது மெழுகுவர்த்தியின் பிரகாசம், அறுபது, நூறு மெழுகுவர்த்திகளின் பிரகாசம் (Candle Power) என்று பல ரகங்களைப் பார்க்கிறோம். எத்தனை மெழுவர்த்திகளின் பிரகாசம் இணைகிறதோ அதற்குத்தகுந்தவாறு ஒளிவெள்ளம் பாயும். அதே போலத்தான் பல மெழுகுவர்த்திகளின் பிரகாசமாக விளங்கி தமிழினத்தின் விடுதலை இயக்கத்துக்கு ஒளியூட்டினர் அமரர் டாக்டர் நாகநகதன். அதேபோல நாம் ஒவ்வொருவரும் மெழுகு வர்த்திகளாக மாறினல்தான், சுதந்திரம் என்ற ஒளி வெள்ளத்தை நாம் காணமுடியும்"

இவ்வாறு அமரர் டாக்டர் நாகநாதனைப்பற்றி கரிகாலன் எழுதிய 'மெழுகுவர்த்தி' என்னும் நூலின் வெளியீட்டு விழாவில்பேசிய சட்டத்தரணி திரு. எஸ். ஸி. சந்திரகாசன்குறிப்பிட்டார்.

சுதந்திரன் வெளியீடாக வந்துள்ள இந்நூலின் வெளியீட்டு விழாவும் அமரர் நாகநாதன் நினைவு விழாவும் 5-2-78 ஞாயிற்றுக் கிழமை [illegible] மண்டபத்தில் [illegible] தல் வார் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது.

நூல் விற்பனையை இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை தொடக்கி வைத்தார். நூலை ஆய்வு செய்து உரை நிகழ்த்திய திரு. ஈழவேந்தன் பேசுகையில் கூறியதாவது:—

"டாக்டர் நாகநாதன் அவர்களுடன் ஒட்டுறவாடி, அவரது அரவணைப்பில் வளர்ந்த நண்பர் கரிகாலன் டாக்டரின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் உள்ள அர்த்தத்தைபுரிந்தவர் கரிகாலன். அவரைவிட டாக்டரை விமர்சிக்கவோ அவரது வாழ்க்கை சம்பவங்களை இவ்வாறு தொகுத்துத்தரவோ வேறு யாராலும் முடியாது. கரிகாலனின் பணிதொடர வேண்டும்: 1977 ஆகஸ்ட் இனக்கொலை பற்றிய கரிகாலனின் அடுத்த நூல் மிக விரைவில் வரவேண்டும்" என்றார்.

நூலை அறிமுகம் செய்து வைத்து சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் பேசுகையில்—விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்கு கடந்த 30 ஆண்டுகளாக தமது இரத்தத்தை நீராய்ப்பாய்ச்சி, உழைப்பை எருவாய் இட்டு. அதிலேயே தம் உயிரையும் அர்ப்பணித்த பழம் பெரும் தலைவர்களையும் தொண்டர்களையும் கௌரவிக்க வேண்டும்; போற்ற வேண்டும். அவர்களுக்கு உதவ வேண்டும் இன்றேல் நாம் நன்றி கெட்டவர்களாவோம்', என்றார்.

டாக்டர் எஸ். ஏ; தர்மலிங்கம் பேசுகையில், தமிழினத்துக்காக அடிபட்டு, உதைபட்டு, தன்னுடைய உயிரையே அர்ப்பணித்தவர் நாகநாதன். அவரது வழியில் இந்த இயக்கத்தை வளர்ப்பதற்கு எண்ணற்ற தொண்டர்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறார்கள்; அவர்களையெல்லாம் நாம் மறக்கக் கூடாது" என்றார்.

கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. பேசுகையில் கூறியதாவது:—

"நான் தமிழரசுக்கட்சியிலே தந்தைசெல்வாவை இயக்கத்தின் தந்தையாகவும், டாக்டர் நாகநாதனை தாயாகவுமே கண்டேன். எந்த நெருக்கடியிலும் தன் உயிரைப்பற்றி பொருட்படுத்தாமல் ஓடிவந்துதோள் கொடுக்கும் ஒரு கர்மவீரராக டாக்டர் நாகநாதன் திகழ்ந்தார். 1949ல் தமிழரசுக்கட்சியின் செயலாளராக மட்டுமல்ல—1944ம் ஆண்டு

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 350 இலட்சம் மக்களைக்கொண்ட ஸ்பெயினில் 20 இலட்சம் மக்களுக்கு தன்னாட்சி!

## ஆண்ட பரம்பரைக்கு மீண்டும் அரசுரிமை! ஸ்பானிய பிரதமரின் முன்மாதிரி!

350 இலட்சம் மக்களைக்கொண்ட ஸ்பெயின் நாட்டில் வாழும் 20 இலட்சம் "பாஸ்க்" (Basque) இனமக்களுக்கு தன்னாட்சி வழங்குவதென்று ஸ்பெயின் நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாஸ்க் இன மக்கள் ஸ்பெயின் நாட்டின் வடபகுதியில் வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் ஸ்பெயின் நாட்டின் தொல் பெருங்குடியினர். மலைப்பகுதிகளில் வாழுபவர்கள் தங்களுக்கென்று தனியான பிரதேசமும், தனியான மொழியும் கலாசாரமும் கொண்டவர்கள்.

ஸ்பானிய உள்நாட்டு யுத்தம் நடைபெறுவதற்கு முன் தங்கள் பிரதேசத்தை தாங்களே ஆண்டு தனியாட்சி நடத்தி வந்தார்கள் பாஸ்க் இனத்தினர். ஆனால் அவர்கள் தமது இந்தத்தன்னாட்சி உரிமையை 1939ம் ஆண்டு பறிகொடுத்தனர். அந்த ஆண்டு ஸ்பானிய உள்நாட்டு யுத்தத்தில் வெற்றியீட்டி ஸ்பானிய நாட்டை கைப்பற்றிய ஜெனரல் பிரான்சிஸ் பிராங்கோ என்ற சர்வாதிகாரி, பாஸ்க் இனத்தினரின் சுயாட்சியை அபகரித்தான். அப்போது அவர்கள் தங்கள் அரசுரிமையை பறிகொடுத்தனர்.

ஸ்பானிய நாட்டின் வடபிரதேசத்திலும் பிரான்ஸ் நாட்டு எல்லைப்பிரதேசங்களிலும் வாழ்ந்து வரும் இந்த தனித்தேசிய இனத்தவரான பாஸ்க் இனத்தினர் தமது சுயாட்சியைப் பறிகொடுத்த காலத்திலிருந்தே கடந்த 40 ஆண்டுகளாக- ஆண்டபரம்பரை மீண்டு மொருமுறை ஆளநினைப்பதில் என்னகுறை என்றுகேட்டுவிடுதலைக்காகப் போராடி வந்திருக்கின்றனர்.

வலதுசாரி சர்வாதிகாரியான பிராங்கோவின் அதிகார வெறியினால் மிக அதிகமாக கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டவர்கள் தாம்தான் என்று 20 இலட்சம் பாஸ்க் இனமக்கள் கூறுகின்றனர்.

இப்போது ஸ்பானிய நாட்டை ஆட்சி புரியும் பிரதமர் அடொபோ ஸ்கொயரெஸ் அவர்களின் அரசு, பாஸ்க் இனமக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு மதிப்பளித்து. அவர்களுக்கு அவர்கள் இழந்த தன்னாட்சியுரிமையை மீண்டும் வழங்குவதென்று அறிவித்திருக்கிறது. பத்துமணிநேரம் ஆலோசனை நடத்திய பின் ஸ்பானிய மந்திரிசபை இந்த முடிவை அறிவித்திருக்கிறது.

இதன்படி 'பாஸ்க்' இனமக்கள் வாழும் மூன்று மாகாணங்களும் தன்னாட்சி பெறவிருக்கிறது. இதையிட்டு அவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஸ்பானிய நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு, அதிலே இந்த தன்னாட்சி உரிமையும் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாவதற்கு இடையில் தற்காலிக ஏற்பாடாக உடனடியாகவே பாஸ்க் மாகாணங்களுக்கு தன்னாட்சி வழங்கப்படுகிறது.

பாஸ்க் மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்குவது என்று ஸ்பானியப் பிரதமர் எடுத்த புத்திசாலித்தனமான முடிவினால், பாஸ்க் விடுதலை இயக்க தீவிரவாதிகள் அண்மையில் நடத்தவிருந்ததீவிர போராட்டம் தவிர்க்கப் பட்டுவிட்டது.

பாஸ்க் மாகாணத்துடன் வரலாற்று ரீதியாக இணைந்திருந்த நவாரா மாகாணம், தொடர்ந்தும் பாஸ்க் நாட்டுடனேயே சேர்ந்து இருக்கப் போகிறதா இல்லையா என்பதை அறிய நவாரா மாகாணத்தில் ஒரு பொதுசன வாக்கெடுப்பையும் ஸ்பானிய அரசு நடத்துகிறது.

ஸ்பானிய பிரதமரின் முன்மாதிரியைப் பின்பற்றி ஆண்டிருந்த ஈழத்தமிழினத்துக்கும் மீண்டும் அதன் தன்னாட்சியை வழங்குவதற்கு 'இலங்கையின் புதிய ஜனாதிபதி. நடவடிக்கையெடுப்பாரா என்று உலக அரசியல் நோக்கங்கள் அவதானித்து வருகின்றனர்'

## வல்லையில் பொலிசார் அட்டூழியம்

மறைந்து திரியும் வாலிபர்களைத் தேடுவதாகக் கூறிக்கொண்டு வல்லையில் பொலீசார் அட்டூழியம் புரிகின்றார்களாம்!

கடந்த திங்கட்கிழமையன்று இரவு (6-2-78) வல்வெட்டித்துறையிலுள்ள ஆலடி என்னுமிடத்தில் கடைவைத்திருக்கும் செல்வராசா யோகராசா என்ற இளைஞரைப் பொலிஸ் நிலயத்திற்குஅழைத்துச்சென்று இரவிரவாக அங்கு அடைத்து வைத்திருந்ததோடு, அவ்வாலிபரை அடித்தும் உதைத்தும் இம்சைப் படுத்தினராம்.

மேற்படி வாலிபரது சகோதரர் 'குட்டிமணி' என்பவர் சிறிலங்கா ஆட்சியின்போது காராக்கிரகத்தில் பல ஆண்டுகள் அடைத்துவைக்கப் பட்டிருந்தவர். அந்தச்சகோதரர் எங்கே? என்று விசாரித்தே யோகராசாவைச் சித்திரவதை செய்தார்களாம்.

யோகராசாவை ஜீப்பில் ஏற்றிச்சென்ற பொலீசார் ஜீப்பில் வைத்து அவர்மீது ஏறிமிதித்தும், அடித்தும் துன்புறுத்தினராம். பல இளைஞர்களின் பெயர்களைச் சொல்லி அவர்களைத் தெரியுமா? என்று கேட்டார்களாம். தெரியாது என்று கூறிய குற்றத்திற்காகவே மேலும் மேலும் நள்ளிரவு வேளையிலும்கூட அவரைத் தாக்கினார்களாம்.

யோகராசாவின் இன்னுமொருசகோதரரை பொலிஸ் நிலயத்திற்கு அழைத்துவர வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் மறுநாட்காலையிற்தான் அவரை விடுதலை செய்தார்களாம்.

பொலீசாரின் காட்டுமிராண்டித்தனமான இந்த நடவடிக்கையினால் வல்வையின் கடைத்தெருவில் நடமாடுவதற்குக்கூட பொதுமக்கள் அஞ்சவேண்டியுள்ளது.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் செய்தவற்றின் 'மிச்சம் சொச்சத்தை' 'இவர்கள்' தொடரப்போகின்றார்களா? என பொதுமக்கள் கேட்கின்றார்கள்.

—''வல்வையூரான்'

## சுதந்திர ஒளியைக் காண...

—4-ம் பக்கத் தொடர்

தமிழ்காங்கிரஸ் இயக்கம் ஆரம்பமானபோதே அதன் செயலாளராகி, காங்கிரஸின் அமைப்புத்திட்டத்தையே எழுதியவர் டாக்டர் நாகநாதன்தான்.

அமரர் டாக்டர் நாகநாதனும் ஏனைய தலைவர்களும் காட்டிச்சென்ற பாதையிலே நாம் சென்று கொண்டிருக்கிறோம். சத்தியம் வெல்லும், தர்மம் தலையெடுக்கும் என்ற நம்பிக்கையுடன் இலட்சியப்பாதையிலே வழுவாது செல்கிறோம். நிச்சயம் நமது இலட்சியத்தை வென்றெடுத்து, சுதந்திரத்தமிழ் ஈழத்தை உருவாக்கியே தீருவோம்.''

சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் —ஜே. ஆர். நமக்கு உரிமை தருவாரா என்று கேட்டுக்கொண்டிருப்பதை விட, நமது விடுதலையை மீட்டுக்கொள்ள நாம் என்ன செய்கிறோம் என்பதையே சிந்திக்கவேண்டும், நாம் ஒரு தேசிய இனமென்றவகையில் நமது அரசியல் விடுதலையை வென்றெடுப்பதற்கு வேறு எவரையும் நம்பிக் கொண்டிருக்கவேண்டியதில்லை. கிளைகளை அமைத்து நமது இயக்கத்தை பலமாக்குவதே விடுதலைக்கு நமது முதற்கடமை" என்றார்.

உடுப்பிட்டி பா. உ. திரு. த. இராசலிங்கம் பேசுகையில் தமிழ்பேசும்மக்கள் மத்தியில் சாதியையும் தீண்டாமையையும் ஒழித்துக்கட்டி, தமிழினத்தை ஒற்றுமைப்படுத்த உழைத்தவர் டாக்டர் நாகநாதன். என்னை முதவை உறுப்பினராக்குவதற்கு அவர் அன்று முழு முயற்சியெடுத்தார். நான் தமிழினத்துக்காக, இயக்கம் இடும் கட்டளை எதுவானாலும் ஏற்று, டாக்டர் நாகநாதனின் வழியில் என்னை அர்ப்பணிக்கத்தயாராக இருக்கிறேன் என்றார்.

நூலாசிரியர் கரிகாலன் பேசுகையில் — "டாக்டர் நாகநாதன் பணமுதலைகளை நம்பியிருந்தவர் அல்ல; இயக்கத்துக்காக உண்மையாக உழைத்தவர்களை கைதூக்கிவிட்டவர்" என்றார்.

விழாவில் பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், யாழ் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன், சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம், நா. செல்லத்துரை, ஆ. துரைராசசிங்கம், எஸ். கே. மகேந்திரன், கனகமனோகரன் ஆகியோரும் உரையாற்றினர்.

## முதுகெலும்...

—3-ம் பக்கத் தொடர்

### எம் தலைவர்களுக்கு

சாதாரண மாணவராக எமக்குச் சென்ற இடங்களிலெல்லாம் மக்களைக் கவர முடிந்ததென்றால்— பத்தாயிரத்துக்கும் மேலான மக்கள் நிறைந்த கூட்டத்திலே பேச முடிந்ததென்றால்—எம் பிரச்சனையை எடுத்தோதஇயன்றதென்றால்— அவற்றைக்கூறி அம் மக்களின் கண்ணீரை வரவழைக்க முடிந்ததென்றால்—'எமக்கு இவைபற்றித் தெரியாதே. இவ்வாறுஇனப் படுகொலை இனிமேல் நிகழின் உடன் தெரியப்படுத்துங்கள்- வள்ளம் மூலமாவது இலட்சக் கணக்கிலே வந்து இறங்குவோம்' என்று உணர்ச்சிபூர்வமாகக் கூறி வைக்க முடிந்ததென்றால்— எமது தலைவர்கள் "மனம் வைத்தால்" எவ்வளவற்றைச் சாதிக்கவியலுமென்பதை எண்ணிப்பாருங்கள்! இந்தியாசெல்லுகின்ற எமது தலைவர்களில் அதிகமானோர் தத்தம் 'சொந்த அலுவல்களை' நிறைவேற்றுவதோடு திரும்பி விடுகின்றனர் நம்பிக்கைக்குரிய சிலர் மட்டும் கருணாநிதி, எம். ஜி. ஆர். போன்றவர்களை மாத்திரம் சந்திப்பதோடு திரும்பி விடுகின்றனர். எவராவது பொதுமக்களைச் சந்திப்பதற்கு முயன்றது கூடக் கிடையாது. இனிமேலாவது இவற்றைச் சிந்தித்துச் செயலாற்றுவார்களாக.

மேலும், இங்குள்ள சில 'கலாநிதிகள்' சென்னையிலே தாம் சொந்த வெளியீடுகளுக்காகச் செல்வதாலேற்பட்ட அறிமுகங்களிடையே 'வட்டங்களை' அமைத்துள்ளனர். இங்கு புரியும் எட்டப்பர் வேலையை அங்கும் இயற்றுகின்றார்கள். இதனையும் எம தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

### தமிழன்பர்கட்கு

ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்னர் 'சுடர்' மூலம் என்னுடன் பேனா நண்பரான பரிமளா மணாளன் அவர்களும் மாநாட்டிற்கு வருகை தந்திருந்தார். யாம் பேசிய யாவற்றையும் ஒலிப்பதிவு செய்துள்ளார். இங்கு கருத்தரங்குகளை ஏற்படுத்தி அவற்றை ஒலிபரப்புகின்றார் எமக்காக ஒரு ஏட்டையும் எழுத ஆரம்பித்துள்ளார், இவ்வளவுக்கும் அவர் ஓர் ஏழை. என்னைப் பொறுத்தவரை 'சுதந்திரன்' யாவற்றையுந்தொடர்ந்து அனுப்பி வருகின்றேன். 'தமிழீழம்' தொடர்பான நூல்கள் செய்தித்தாள்கள்என்பனவற்றையும் அனுப்புகின்றேன். ஒரு தொடர்பாலே இவ்வளவற்றைச் சாதிக்க இயலுமென்றால் எந் தமிழீழ இளைஞர்களும்யுவதிகளும் இயலுமானவரையிலே முயன்றால் எவ்வளவு தூரம் எம்பிரச்சனையை தமிழ் நாட்டுச் சகோதரர்களுக்குப் புரிய வைக்க முடியுமென்பதை எண்ணிப் பாருங்கள். குறைந்தது, எமது போராட்டம் நியாயமானது — நீதியின் பாற்பட்டது — என்பதையாவது எமது சகோதரர்களுக்குத் தெரியப்படுத்தக்கூடாதா?

எண்ணிய எண்ணியாங்கு
எய்துப எண்ணியர்
திண்ணிய ராகப்பெறின்:
(முற்றும்)

(இக்கட்டுரைகள் பற்றி ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் கட்டுரை ஆசிரியர் அவற்றுக்கு பதிலளிக்க [illegible])

லாலா
நீலசோப்
எல்லா கடைகளிலும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘200 சதுர மைல் - 4 இலட்சம் மக்களைக்கொண்ட பிரதேசத்துக்கு தனியான நிர்வாக அமைப்பு ஏற்படுத்த முடியுமென்ருல்....



“வெளிநாட்டு மூலதனங்களை இங்கு தருவிப்பதற்காகவும் உலக நாடுகளிடையே இலங்கை நாணயத்தின் பெறுமதியை உயர்த்துவதற்காகவும், 200 சதுரமைல் பரப்பளவையும் 4 இலட்சம் மக்களையும்கொண்ட ஒரு பிரதேசத்தை நிர்வகிப்பதற்கு ஒரு தனியான அதிகார பீடத்தை இந்நாட்டில் உருவாக்க முடியுமென்ருல்—தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற அவர்களுக்கென தனியான ஒரு சுதந்திர பிரதேசத்தை உங்களால் ஏன் உருவாக்கமுடியாது?”

—இவ்வாறு 20-1-78ல் தேசிய அரசுப்பேரவையில் சுதந்திர வர்த்தக வலயம் மீது பேசிய முல்லைத்தீவு பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு குறிப்பிட்டார். அவரது உரை வருமாறு:—

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்கள் உட்பட இந்நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திர வர்த்தக வலயம் அமைக்கும் கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பதாக இங்கு பேசிய நிதியமைச்சர் குறிப்பிட்டார். ஆனுல் நாங்கள் எங்கள் பகுதிகளில் எமது மக்களுக்கு திட்டவட்டமாக கூறினேம் — எதிர்காலத்தில் ஆட்சிக்குவரும் அரசாங்கம், இந்நாட்டு கைத்தொழில் துறையை முன்னேற்ற என்ன நடவடிக்கையை எடுத்தாலும் இந்நாட்டில் சுதந்திரமுள்ள மக்களாக தம்மைக் கருதாதமக்களுக்கு சுதந்திர வர்த்தக வலயத்தினுல் எதுவித பயனுமில்லை என்று எடுத்துரைத்தோம்.

லலித் அத்துலத் முதலி:— உங்களுக்குத் தனிநாடு வேண்டுமா?

செல்லத்தம்பு:— இந்த நாட்டில் பல வேதனைகளுக்குமத்தியில் தாங்கள் வாழ்ந்துகொண்டிருப்பதாக குமுறிக்கொண்டிருக்கும் மக்களுக்கு சுதந்திர வர்த்தகவலயம் எந்தவித பயனையும் தரப்போவதில்லை. இதை நாம் தமிழ்பேசும்மக்களுக்கு கூறியிருந்தோம். சுதந்திர வர்த்தகவலயத்தை எமது மக்கள் எந்த வகையிலும் ஆதரித்ததாக கூறுவது தவறு என்றே நான் கருதுகிறேன்.

200 சதுரமைல்கள் பிரதேசத்தையும் நான்கு இலட்சம் மக்களையும் கொண்ட ஒரு பகுதியை தனியாக நிர்வகிப்பதற்கு நீங்கள் தனியான ஒரு அதிகாரசபையை ஏற்படுத்துகிறீர்கள். இந்த அரசாங்கம் எங்கள் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது ஒன்றுக்காக மட்டுமே வெளிநாட்டாரை இங்கு மூலதனமிடுமாறு அழைப்பு விடுக்கமுடியுமானுல்...

சபாநாயகர்:— ‘ஈழம்’!

லலித் அத்துலத் முதலி:— அவர்கள் பாரிய யாழ்ப்பாண அதிகாரசபையொன்றை விரும்புகிருர்கள் என்று கருதுகிறேன்.

செல்லத்தம்பு:— இதனை அரசாங்கம் செய்யமுடியுமானுல், இந்நாட்டுத் தமிழ் பேசும்மக்களின் அபிலாஷைகளை ஈடுசெய்யக்கூடிய முறையில் ஒரு சுதந்திர வலயத்தை ஏற்படுத்திக்கொடுப்பதும் அவர்களுக்கு கஷ்டமானதல்ல, இப்படிச் செய்ய அரசாங்கத்தால் ஏன் முடியாது?

ஓர் உறுப்பினர்:— அது ஒரு வகுப்புவாத வலயமாக இருக்காதா?

செல்லத்தம்பு; இதற்கும் வகுப்புவாதத்துக்கும் தொடர்பு கிடையாது. இந்நாட்டில் பல்வேறு துறைகளிலும் தங்களுக்கு சுதந்திரம் கிடையாது என்று தமிழ் மக்கள் குமுறிக்கொண்டிருக்கிருர்கள். அவர்களில் பெரும்பான்மையினரது குடியுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. மொழியுரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. கல்வி, தொழில் வாய்ப்புக்கள் பறியோய்க் கொண்டிருக்கிறது. கணக்கிலடங்காத காலமாக தங்கள் மூதாதையர் வாழ்ந்துவந்த பிரதேசத்தை மெல்லமெல்லஇழந்து வருவதாக அவர்கள் உணர்கிருர்கள். இப்படிப்பட்ட தமிழ் மக்களின் அபிலாஷைகளை இந்த அரசு தீர்த்து வைக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது அதிகப்படியானதா?

தமிழ் பேசும் மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் உண்டென்பதை தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலேயேதிட்டவட்டமாக குறிப்பிட்ட முதலாவது பெரும்பான்மைக் கட்சி ஐக்கிய தேசியக்கட்சி என்பதை நாம் நினைவில் வைத்திருக்கிறேம். உங்கள் உறுதிமொழியைநிறைவேற்ற உங்களுக்கு நாம் காலம் தந்திருப்பது உங்களுக்குதெரியும், எந்த வடிவத்தில் இன்னும் எவ்வளவு காலத்தில் தமிழினப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவிரும்புகிறீர்கள் என்பதை அறிய ஆவலாக உள்ளோம்.

நாம் சுதந்திரமற்ற மக்களாக வாழ்கிறேம் என்கிற உணர்ச்சி எமக்கு இருக்கும் வரை—ஒரு சுதந்திர நாட்டில் எமது மொழிக்கு என்ன அந்தஸ்து இருக்குமோ அந்த அந்தஸ்து எமது மொழி அனுபவிக்கவில்லையென்ற மனக்குறை எமக்குஇருக்கும் வரை—எங்கள் மூதாதையர் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் பாரம்பரிய நிலம் எங்கள் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் இல்லாமல் போய் விடுகின்ற அபாயத்திலிருப்பதாக நாம் அஞ்சுகின்ற வரை — இந்த சுதந்திர வர்த்தகவலயம் நிறுவப்படுவதில் எம்மைப் பொறுத்தவரை எந்தவித அர்த்தமும் இல்லையென்று அதனுல் தான் நான் குறிப்பிட்டேன்.

“கடந்த ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தமக்கு ஏற்பட்ட பயங்கர கொடூரங்கள் மீண்டும் நிகழாது என்று எந்த நம்பிக்கையுடன்—அச்சமின்றி எமது மக்கள் எவ்வளவுதூரம் சுதந்திர வர்த்தக வலயத்தில் வந்து வாழ்ந்து அங்கு வேலை செய்ய முடியுமென்று எனக்குப் புரியவில்லை. அந்த அளவுக்கு — தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் நிலைபரமான ஒரு நிலை ஏற்படும்வரை— அவர்கள் சுதந்திர வர்த்தக வலயத்துக்கு வந்து உங்கள் திட்டம் நிறைவேற ஒத்துழைப்புத்தரக்கூடிய சூழ்நிலையில் இல்லையென்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதனுல் தான் நாம் உங்களை ஆதரிக்க முடியாமலிருக்கிறது.

## தமிழர்களுக்கென சுதந்திர பிரதேசத்தை ஏன் உங்களால் உருவாக்க முடியாது?”

### ஆட்சியாளரிடம் செல்லத்தம்பு கேள்வி!

பல்வேறு உறுதிமொழிகளையும் நிறைவேற்றி வருகிறீர்கள் ஆனுல் ஒரேயொரு உறுதிமொழி மட்டும் நிறைவேற்றப்படாமல் அப்படியே இருக்கிறது. அந்த உறுதிமொழியை நிறைவேற்ற நீங்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் எமக்கு தோன்றவில்லை, தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள்...”

லலித் அதுலத் முதலி- பொறுத்திருந்து பாருங்கள்.

செல்லத்தம்பு: தமிழ்பேசும் மக்களின் பிரச்சினை தான் எமக்கு முதன்மையாக காணப்படுகிறது. இதை நீங்கள் உணர வேண்டும்.

இந்த நாட்டில் நாங்கள் சுதந்திரமும் சமத்துவமும் உள்ள மக்களாக நாம் வாழ்வதாக நமது மனச்சாட்சிப்படி நாம் நெஞ்சார உணர்கின்ற காலம் வரும்வரை சுதந்திர வர்த்தக வலயம் பற்றியோ வேறு எந்த வலயம் பற்றியோ நாம் சிந்திக்க முடியாது.

“வெளிநாட்டு மூலதனங்களை இங்கு முதலீடு செய்ய வெளிநாட்டாரை அழைக்க வேண்டுமென்பதற்காக — உலக நாடுகளில் இலங்கை நாணயத்தின் பெறுமதியை உயர்த்துவதற்காக — 200 சதுரமைல்களையும், 4 இலட்சம் மக்களையும் கொண்ட ஒரு தனி அதிகார பீடத்தை உருவாக்க உங்களால் முடியும் என்ருல்—இந்த நாட்டில் தமிழ் மக்கள் சுதந்திர மக்களாக உங்களுடன் சமத்துவமான, மரியாதையுள்ள சம பங்காளிகளாக — வாழ்வதற்கு தமிழ் மக்களுக்கென ஒரு சுதந்திர பிரதேசத்தை ஏற்படுத்த ஏன் உங்களால் முடியாது? இதுவே எமது கேள்வியாகும்.

(20-1-78ல் தேசிய அரசுப் பேரவையில் பேசியது)


## இப்போது விற்பனையாகிறது!

# மெழுகுவர்த்தி

மேட்டுக்குடியிலே முகிழ்த்த ஒரு மனிதன், தன்னைச் சுற்றிப் படர்ந்திருந்த சுகவாழ்வையும் புவன போகங்களையும் புறக்கணித்துவிட்டு தமிழ் விடுதலைப் போரின் ஈட்டிமுனையாக மாறினுன். அந்த மறவனுடன் இலட்சியப்பாதைவழியே வழித்துணை சென்ற ஒருவனின் நாட்குறிப்புகள் இது.

நூலாசிரியர்: கரிகாலன்

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. யின் மதிப்புரையுடன்

கிடைக்கும் இடம்! சுதந்திரன் அலுவலகம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மற்றும் எல்லா சுதந்திரன் ஏஜண்டுகளிடமும்.


## அண்ணவிட,..

—7-ம் பக்கத் தொடர்

“இரண்டாயிரமாண்டுகளாக தமிழ் அன்னை தவமிருந்து பெற்றெடுத்ததலைமகன் அண்ணு. உலகத்தில் வாழும் ஏழு கோடித்தமிழர்களும் ஒருசேர ஏற்றுக்கொண்ட ஒரேயொரு தலைவராக விளங்கியவர் அண்ணு. முப்பதாண்டுகளாக தொடர்ந்து இந்தியை எதிர்த்துப் போராடி தமிழ் நாட்டிலிருந்து இந்தியை வெளியேற்றியவர் அண்ணு;

“அண்ணு அவர்கள் இந்திய தேசியத்தில் மயங்கியிருந்த தமிழினமக்களை தட்டியெழுப்பி அவர்களுக்கு வரலாற்றை நினைவூட்டி, மொழியுணர்வை யூட்டி, தமிழர்களை தமிழர்களாக்கியவர் அண்ணு மிகச் சிறந்த சொற்பொழிவாளராக— எழுத்தாளராக, நாடகாசிரியராக, நடிகராக, திரைப்பட வசனகர்த்தாவாக, அரசியல் வித்தகராக பல துறையிலும் ஒப்பாருமிக்காருமின்றி உயர்ந்தோங்கி நின்ற அண்ணு எளிமையின் இருப்பிடமாகவும், அடக்கத்தின் உறைவிடமாகவும் விளங்கினுர். அண்ணு ஏற்படுத்திவைத்துவிட்டுச் சென்ற இன உணர்ச்சி இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு நின்று நிலைத்து தமிழ் மக்களுக்கு வழிகாட்டும்— ஒளியூட்டும்.

“தமிழ் நாட்டுக்கு ‘தமிழ் நாடு’ என்றதலைப்பை எழுதிவிட்டு அண்ணு மறைந்தார்; அண்ணு உருவாக்கிய அந்தத் தமிழ்நாட்டுக்கு வேண்டிய ஏனைய அத்தியாயங்களை அவருடைய அடியொற்றிப் பணியாற்றும் கலைஞர் கருணநிதி அவர்கள் இப்போது எழுதிவருகிருர்'' என்ருர்.

## ஈழவேந்தன்

தமிழேந்தல் ஈழவேந்தன் பேசுகையில் கூறியதாவது:

“தமிழனின் மதத்துறையிலும், சமுதாயத்துறையிலும் படிந்திருந்த அழுக்குகளை அகற்றி அவற்றைத் தூய்மைப்படுத்தும் தமிழ் நாட்டின் சலவைத்தொழிலாளியாக அண்ணு விளங்கினுர். தன்னுடைய சொல்லாலும் செயலாலும் தியாகத்தாலும் தமிழர்களுடைய இன தேசிய உணர்வை தட்டியெழுப்பி அவர்களை வடநாட்டு மயக்கத்திலிருந்து விடுபடவைத்து வழிநடத்தியவர் அண்ணு: அவர் தந்துவிட்டுச் சென்ற கருத்துக்கள்— அவர் ஈழத்தமிழருக்காக ‘ஹோம்லண்ட்’ இதழிலும், திராவிட நாட்டிலும் எழுப்பிய குரல் — எப்போதும் மறக்க முடியாதவை” என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் மும்மொழி!

# தமிழனுக்கு அது சவக்குழி! இப்படிக் கூறுகிறது தென்மொழி!

அண்மையில் இலங்கையில் நடந்த சிங்களவரின் தமிழின அழிப்பு முயற்சிகளுக்குப்பின், அந் நாட்டின் தலைமையமைச்சர் திரு. ஜெயவர்த்தன உலகத்தினரின் கண்களுக்குத் தாம் நல்லபிள்ளை என்று காட்டிக் கொள்வதற்காகப் பலவாறான பசப்பு மொழிகளைப் பேசி வருவதுடன், சில புதிய திட்டங்களையும் தெரிவித்துள்ளார். அவற்றுள் ஒன்று தேசிய ஒற்றுமை என்னும் பெயரால் அறிவிக்கப் பெற்றுள்ள மும்மொழித்திட்டமாகும். அதன்படி தமிழர் சிங்களத்தையும் சிங்களவர் தமிழையும், இரண்டு இனங்களும் ஆங்கிலத்தையும் படிக்க வேண்டும்,

முதலில், அங்கு நடந்து கொண்டிருப்பது சிங்களர்—தமிழர் இனப்போராட்டமோ, சிங்களம்—தமிழ் மொழிப் போராட்டமோ அன்று. ஏனெனில் அத்தகைய போராட்டம் என்பது இரு தரப்பினரின்ஒருங்கிணைந்த எழுச்சியைக் குறிப்பதாகும். ஆனால் அங்கு நடப்பது முழுவதும் சிங்கள வெறியர் அங்குள்ள சிறுபான்மைத் தமிழினத்தை அழிப்பதற்கென்றே எடுத்துக்கொண்ட பெருமுயற்சியாகும். வெளி உலகத்தில் உள்ள பெரும்பாலான மக்களுக்கு இவ்வுண்மை இன்னுந் தெரியாது. எனவே, திரு. செயவர்த்தன அவர்கள், தமிழர்க்கு ஏதோ தங்கள் மொழிக்கு நேர்ந்த தாழ்ச்சிக்கு விடிவு கேட்பதுபோலவும், இவர் அதற்குத் தீர்வு சொல்வது போலவும் கூறி, வெளிஉலக மக்களைத் திசை திருப்பும் வகையிலும், பெரிதோர் இன அழிப்பு முயற்சியை மூடி மறைக்கும் நோக்கத்துடனும், இம் மும்மொழித் திட்டத்தை அறிவித்துள்ளது பெரியதோர் அரசியல் ஏமாற்றாகும்.

இன்றுள்ள அரசியல் நிலைகளைப் பொறுத்த அளவில் இலங்கையின் ஆட்சிஅதிகாரம் முழுவதும் சிங்களவர்களின் கையில் உள்ளது. சட்டப்படி அவர்கள் ஆளும் இனத்தவர்கள்; தமிழர்களோ ஆளப்படும் இனத்தவர்கள். அதுமட்டுமன்று; சிங்களவர்களின் கருத்துப்படி அடிமையினத்தவர். எனவே அரசியல் சட்ட அடிப்படையில் தமிழர்களுக்கோ அவர்களின்மொழியாகிய தமிழுக்கோ எவ்வகையான உரிமையோ, பாதுகாப்போ இல்லை. தமிழுக்குச் சிங்களத்துடனிருந்த சம உரிமைகள் பறிக்கப்பட்டு 21 ஆண்டுகள் ஆகின்றன, திரு. பண்டாரநாயகா 1956இல்இலங்கைத்தலைமை அமைச்சரானதும் முதல் வேலையாக 'இனிச் சிங்களம் மட்டுமே இலங்கையின் ஒரே ஆட்சி மொழியாக இருக்கும்' என்று சட்டம்கொண்டு வந்ததிலிருந்து, சிங்களந்தான் அந்நாட்டின் ஆட்சி மொழி, தேசிய மொழி, அரசு அலுவல் மொழி! (மத உரிமை கூட தமிழர்களுக்கு இல்லை. அங்குள்ள தேசிய மதமும் புத்தமதம் ஒன்று மட்டுமே!) இன்று தமிழ் மொழி தாழ்த்தப்பட்ட இரண்டாந்தர மொழி; ஒதுக்கப்பட்ட மொழி; புறக்கணிக்கப்பட்ட மொழி! தமிழ்மொழிக்கு ஏற்பட்ட தாழ்ச்சி போலவே, நாட்டு ஆளுமை அதிகாரத்தில், கல்வியில் பொருளியலில், தொழில் நிலைகளில் தமிழினமும், ஒதுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் கிடக்கிறது. இக்காலோ, அரசு அலுவலகங்களிலும், கூட்டு நிறுவனங்களிலும் தப்பித்தவறிப்பணியாற்றும் வாய்ப்பைப் பெற்று எஞ்சியிருந்த மிகச் சிறுபான்மைத் தமிழரும், அங்குள்ள சிங்களவர்களால் அடித்து விரட்டப்பட்டும் படுகொலை செய்யப்பட்டும் வருகிறார்கள்;

தமிழ் பேசும் மக்களின் பரம்பரை நிலப்பகுதிகள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினாலும், பிறவகைகளாலும், சிங்கள வெறியர்களால் கைப்பற்றப்பட்டு, அவர்களின் குடியேற்றப் பகுதிகளாகவும், ஆளுமையுரிமைக்குரிய நிலங்களாகவும் மாற்றப்பட்டு வருகின்றன. இவ்வகையில் தமிழின மக்கள் வாயிழந்த பூச்சிகளாக, புன்மைத் தேரைகளாக நலிக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வருகின்றனர். இந்நாளில் தமிழரின் உரிமைக்கும் உடைமைக்கும் உயிர்க்கும் இரக்கமோ, ஈவோ அந்நாட்டில் இம்மியும் இல்லை.

இத்தகைய கொடுமை நிலைகளுக்கெல்லாம் தமிழர்கள் சிங்களம் படிப்பதால் தீர்வு ஏற்பட்டு விடும் என்பது, பசி பட்டினியால் சுருண்டுவிழுந்து மயங்கிக் கிடக்கும் ஒருவனிடம், அந்த நாட்டு மொழி படித்துக் கொண்டால் சோறுகிடைக்கும் என்று சொல்வதைப் போன்ற அடாத செயலாகும்! தமிழர்களுக்கு இன்று வேண்டுவது மொழியுரிமையோ, இன உரிமையோ அன்று; நாட்டு விடுதலையே! தனிநாடு கிடைத்த பின் இன நிலையிலும் மொழி நிலையிலும் மற்றும் பண்பாட்டு நிலையிலும் அவர்கள் இழந்து போன உரிமைகள் தாமே வந்து சேர்ந்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

1956-க்கு முன் தமிழர்கள் இயல்பாகவே சிங்களம் படித்துத்தான் வந்தார்கள். ஆனால் "சிங்களம் மட்டும்" என்னும் அளவில், என்று சட்டப்படி அம்மொழிமட்டும் முழுத்தனி ஆளுமை உரிமை பெற்றதோ, என்று தமிழ் இரண்டாந்தர, மூன்றுந்தர மொழியாக்கப்பட்டு—சட்டத்தின்முன் தன் முழு உரிமையையும் இழந்ததோ-அன்றிலிருந்து தமிழர்கள் சிங்களம் படிப்பதைத் தவிர்த்துத் தங்கள் தாய்மொழியையும் கலை பண்பாடுகளையும் காக்கத் தொடங்கி விட்டனர். இப்பொழுதோ நிலைகள் இன்னும் தலை கீழாக மாற்றப்பட்டு, தமிழர்களின் உரிமைக் கப்பல் விடுதலை நிலத்தை நோக்கி வெகு தொலைவுக்குச் சென்றுவிட்டது. இந்நிலையில், பழைய கதையை நினைத்துப்பார்த்துச் 'சிங்களம் மட்டும்' என்னும் 1956-ஆம் ஆண்டின் ஒரு சார்பு ஆளுமைச்சட்டம் இம்மியும் தளர்த்தப்படாத நிலையிலும் — தமிழ்மொழி வழி அரசுப் பணியில் தப்பித்தவறிச் சேர்த்துக்கொள்ளப் பெற்றோரும், மூன்று ஆண்டுகளுக்குள் சிங்களம் படித்துத் தேர்வில் தேற வேண்டும் என்றும், இன்றேல் அவர்களுக்குப் பதவி உயர்வு, வேலை நிலைப்பு, ஒய்வு ஊதிய வாய்ப்பு, ஒன்றுமே கிடையாது என்றும், (இவ்விந்திய நாட்டில் உள்ள இந்தி வெறியரின் கோட்பாடு போல்) உள்ள ஓர் அரசியல் சட்ட நடைமுறைகளைச் சிறிதும் தளர்த்தாத நிலையிலும்—வெறும் ஒப்புக்கும், மெப்புக்கும் திரு. செயவர்த்தன அவர்கள் மும்மொழித்திட்டத்தை அறிவித்துள்ள ஒரு நிலை, ஒன்று அவரின் கரவான உள்ளத்தைக் காட்டுவதாகும்; அல்லது தமிழர்களை அவர் இறுதிவரை ஏமாற்றிக் கொண்டே இருந்து விடலாம் என்றுதப்புக்கணக்குப் போட்டு விட்டதாகும்.

பெரிதும் சிறிதுமான இரண்டு இனங்கள், ஏதோ ஒரு கால நிலையால், இணங்கியும் நெருங்கியும்வாழவேண்டும் என்னும் கட்டாயத்துக்குட்படுத்தப் பெற்றால் பெரிய இனத்தால் சிறிய இனம் அழிந்துபட்டு விடாமல்—அதன் தனித்தன்மைக்கு ஊறு நேர்ந்து விடாமல் —கட்டிக் காத்துக் கொள்ளும் திட்டத்தைப் பற்றி நாம் எண்ணிப்பார்க்கவேண்டுமேயல்லாமல், பெரியதில் சிறியது கரைந்து போகும் படியான திட்டத்தை நாம் மேற்கொள்ளவேண்டுமென்பது, எவ்வகையாலும் உயிரின வாழ்வியற் கூறுபாடுகளுக்கு ஒத்ததாகாது என்பது மட்டுமன்று; மாறாகத் தீங்கு விளைப்பதும் ஆகும் என்பதைத் தொடர்புடைய அனைவர்க்கும் எச்சரித்துக் கூறுகிறோம்:

—தமிழக ஏடு தென் மொழி(நவம்பர் 1977)

# "அண்ணாவிடமிருந்து கூட்டணித் தலைவர்கள் பாடம் படிக்கவேண்டும்!"

## பேரறிஞர் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் ஆலாலசுந்தரம் உணர்ச்சியுரை!

"பேரறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்படியெல்லாம் வலிவுடனும் பொலிவுடனும் வளர்த்தார் என்பதை அண்ணாவின் வாழ்க்கையிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பாடம் படிக்க வேண்டும். அண்ணாபட்டிதொட்டிகள் எங்கும் கிளைகள், மாவட்டக்கிளைகள் அமைத்து கழகத்தை கட்டுக்கோப்புள்ள அமைப்பாக கட்டியெழுப்பினார். கிளைகள்அமைத்தால், அமைப்பைப் பலப்படுத்தினால் தனக்கு ஆபத்து ஏற்படும் என்று அவர் அஞ்சவில்லை. மற்றவர்கள் வளர்ந்தால் தனக்கு வீழ்ச்சி ஏற்பட்டு விடுமென்றும்அவர்பயந்ததில்லை. அவர் கழகத்தை வளர்த்தார்- கட்டுக்கோப்பாக அமைப்பு ரீதியிலே வளர்த்தார். அதுபோல இங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி முறையான அமைப்பாக உருவாக வேண்டும். கூட்டணியை அமைப்பு ரீதியாக கட்டியெழுப்ப இனியும் யாராவது முட்டுக்கட்டையிடுவார்களானால். அதை தமிழ் மக்கள் பொறுத்துக் கொண்டு இருக்க மாட்டார்கள்!"

—இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை செயலகத்தில் 3 2.78 வெள்ளிக்கிழமை நடைபெற்ற அறிஞர் அண்ணாவின் ஒன்பதாவது ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய சட்டத்தரணி அடலேறு மு. ஆலாலசுந்தரம் முழக்கமிட்டார், இக்கூட்டம் அண்ணாவுக்கு ஐந்து நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகியது.

திரு. ஆலாலசுந்தரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-


"அண்ணா, திமுகழகத்தை ஆரம்பித்த போது பணக்காரர்களை நம்பி கட்சியை ஆரம்பிக்கவில்லை சாதாரண பொதுமக்களை நம்பி, அவர்கள் தரும் ஐம்பது சதம் உறுப்புரிமைப் பணத்தை நம்பியே இயக்கத்தை தொடங்கினார், கட்சிக்காகவும் கட்சித்தொண்டர்களுக்கு உதவுவதற்காகவும் நாடகங்களில் வேஷமேற்று நடித்தார். நாடெங்கும் அமைப்பு ரீதியாக கிளைகளை நிறுவினார்.

"இங்கு நமது பா. உக்களோ தேர்தலுக்குதேர்தல் மட்டுமே கிளைகள் தொடங்குகிறார்கள். தேர்தல் முடிந்தவுடன் அது இருந்தால் கரைச்சல் என்று கிளைகளை மூடிவிடுகிறார்கள். இந்த நிலைமையை இனியும் நீடிக்கமுடியாது. முறையாக கிளைகள் அமைத்து, அமைப்பு ரீதியாக [illegible] பலப்படுத்தி விடுதலை இயக்கத்தை நடாத்த வேண்டும். கிளைகளை அமைக்க நம்மவர்கள் தயங்கினால், இனியும் தமிழ் மக்கள் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள்" என்றார்.

முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா பேசுகையில் கூறியதாவது:-

"அண்ணாவை உலகில் தமிழன் எந்த மூலையில் வாழ்ந்தாலும் மறக்க முடியாது. தமிழனுக்கு ஒரு நாடு வேண்டுமென்பதை உணர்ந்து தமிழ்நாட்டை உருவாக்கியவர் அண்ணா. இங்கு நாமும் தமிழ் நாடு கோருகிறோம். தேர்தலின்போது உச்சக்கட்டமாக தமிழ்நாடு கோரி முழக்கமிட்டோம், இப்போது நமது பா.உக்கள் தமிழ்நாடு கோரிக்கையை இரண்டாவது நிலைக்குதள்ளிவிட்டு வேறு விஷயங்களில் ஈடுபட்டிருப்பது போலத் தோன்றுகிறது. இதற்கு மக்களும் ஒருகாரணம். பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேலை கோரியும், இடமாற்றம் கோரியும் நீங்கள் சென்றால், அவர்கள் அதையே சாட்டாக கொண்டு அந்த வேலையிலேயே ஈடுபட்டு விடுவார்கள். சலுகைகளைசெய்து தரும்படி நமது பா. உக்களிடம் செல்லாதீர்கள், தேர்தல் பிரசாரத்தின் போது கொடுத்த உறுதி மொழிக்கு இணங்க விடுதலை இயக்கத்தை நடத்தச் சொல்லி வற்புறுத்துங்கள்.

"சுதந்திரதினத்தை பகிஷ்கரிக்கும் படி கூறுவதற்கு கூட சக்தியற்று 'கலந்து கொள்ளாமலிருப்பது' என்று கூறவேண்டியநிலைக்கு இன்று வந்து விட்டோம். எதிர்ப்பு இயக்கம் அழிந்து போகக்கூடாது. இதிலே நமது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்."



### கோவை மகேசன்

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் பேசுகையில் கூறியதாவது:

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.



# சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரனுக்கு தமிழினத் தலைவர் அமிர்தலிங்கம் பாராட்டு

"தமிழ்த் தேசிய இனம் இன்று மிகப்பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. இந்த இக்கட்டிலிருந்து நம் தமிழன்னையைக் காக்கின்ற பாரிய பொறுப்பு இன்றைய இளைஞர்களின் கையிலே தங்கியுள்ளது. தமிழினத்தின் வாழ்வுக்கும் வளத்துக்கும் வழி சமைக்க வேண்டிய இளம் சந்ததியை கட்டுப்பாடான முறையில் இட்டுச் செல்ல பல இளந்தலைவர்கள் தேவைப்படுகின்றனர். இளம்பராயத்திலேயே சிறந்த பேச்சாளனாக செயல் வீரனாக இளந்தலைமுறையின் மதிப்பைப்பெற்றவராக தனக்கென்றொரு தனியிடத்தை அமைத்துக் கொண்டிருப்பவர் தம்பி மகேந்திரன். சுதந்திரமான தொழிலான சட்டத்தரணி வேலை பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு நிறையவாய்ப்பை அளிக்கும் ஏற்கனவே பொதுப்பணித் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட தம்பி மகேந்திரன் சமுதாயம் மதிக்கும் தகுதியோடு கூடிய நிலையில் உயர்ந்திருப்பது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்; எங்ஙனம் தந்தை செல்வா எங்களைப் போன்றோரை உருவாக்கினரோ அதேபோன்று இளந்தலைவர்கள் பலரை உருவாக்க வேண்டிய கடமை எமக்கிருக்கிறது. தலைவனுக்குரிய அறிவும் ஆற்றலும் ஆளுமையும் ஒழுக்கமும் ஒருங்கே கொண்டவராக தம்பி மகேந்திரனை நான் காணுகிறேன்."

சட்டத்தரணியாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட காவலூர்த் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரனுக்கு பூங்குடுதீவில் அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் தமிழ் ஈழ முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விழாவிற்கு முன்பதாக திரு. மகேந்திரன் புங்குடுதீபு பாணாவிடைச் சிவன் ஆலய முன்றலில் இருந்து விழா மைதானத்திற்கு இரண்டரை மைல் தூரம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

இவ்விழாவை ஆரம்பித்து வைத்து திரு. கா.பொ.இரத்தினம் எம். பி. உரையாற்றினார். திருமதி. மங்கையர்கரசி அமிர்தலிங்கம், சிவ ஸ்ரீ ஐ. கைலாயநாதக்குருக்கள் சட்டத்தரணி ஆர். விசுவநாதன் நெடுந்தீவு க. சதாசிவம் ஆசிரியர், நயினாதீவு த. ஸ்ரீபதி, வேலணை க, சதாசிவம், நாரந்தனை செ. சிவனேசன், மண்டைதீவு கு.க.நடராசா, கே. வி. தவராசா, வே; க, சோமசுந்தரம், சி. நா. பாலசிங்கம், நா. ஆ. நமசிவாயம், சி. க. சிறீஸ்கந்தராசா, வித்துவான் சி. ஆறுமுகம், சி. குலசேகரம்பிள்ளை, ஆசிரியர் புலவர். ஈழத்துசிவானந்தன் ஆகியோர் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினர்.

## இலியாஸ் தலைமையில் சிரமதானம்

1976ம் ஆண்டுபெப்ரவரித் திங்கள் 2ம் திகதி புத்தளம் பெரிய பள்ளிவாசலில் வைத்து பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்குஇரையாகி உயிர்த்துறந்த ஏழு பேர்களின் ஞாபகார்த்தமாக, இம்மாதம் அதாவது பெப்ரவரித் திங்கள் 2ம்நாள் புத்தளம் தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளர் டாக்டர் ஐ.எம் இலியாஸ் அவர்களின் தலைமையில் புத்தளம் மையவாடியில் சிரமதானம் நடைபெற்றது.

---

விழாவையொட்டி மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது


**கிங்ஸ்லி** (கொழும்பு) 13-வது வாரம்

கமலஹாசன், ரஜனிகாந்த், ஸ்ரீதேவி, விஜயா நடித்த கே. பாலசந்தரின்

**மூன்று முடிச்சு**

**வெலிங்டன்** (யாழ்நகர்)

எம்ஜிஆர் நடித்த— **கணவன்**

(புதிய கொப்பி)

**கெப்பிட்டல்** (கொழும்பு) 2வது வாரம்-

கே. ஆர். விஜயா—ஜெய்சங்கர் நடித்த-

**மேயர் மீனாட்சி**

**பிளாசா** (கொழும்பு) **லிடோ** (யாழ்நகர்)

முத்துராமன், சுஜாதா, சிவகுமார் பத்மபிரியா -நடித்த

**உறவு சொல்ல ஒருவன்**

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)

6-ம் வாரம்

**கணேஷ் பிலிம்ஸ்சார்** அளிக்கும்




**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை] 8-வது வாரம்

முத்துராமன், ஸ்ரீகாந்த், வி. கே. ராமசாமி தேங்காய் சீனிவாசன், ஜெயசித்ரா எஸ். வி. ராமதாஸ், குமாரி பத்மினி சுருளிராஜன், எம். பானுமதி மாஸ்டர் குமார், ஜெயவாணி ஐ. எஸ். ஆர். கண்ணையா, ஹலம்

— நடித்த —

**இன்ஸ்பெக்டர் மனைவி**

(இப்பொழுது காண்பிக்கப்படுகிறது)

**றீகல்** (மட்டுநகர்)

**மூன்று முடிச்சு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு பெப்ரவரி 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; அச்சுப்பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்,